


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.2.2025) மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான எம்.எச்.ஜவாஹிருல்லா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடல்நலம் குறித்து விசாரித்தார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவர் இராமலிங்கம், மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்டத் தலைவர் ரசூல் ஆகியோர் உள்ளனர்.




# வடசென்னையை வளர்ச்சி சென்னையாக மாற்றியது 'திராவிட மாடல்' அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

அப்படி சந்தித்தபோது, பத்திரிகையாளர்களிடத்தில் சொன்ன செய்தி என்னவென்றால், இந்த ஆட்சி சிறப்பாக செயல்படவேண்டும். மக்கள் எந்த எதிர்பார்ப்போடு இந்த ஆட்சியை உருவாக்கி தந்திருக்கிறார்களோ, தேர்தல் நேரத்தில் அறிவித்த அறிவிப்புகளை நிச்சயமாக நாங்கள் நிறைவேற்றுவோம். சொன்னதை செய்யக்கூடிய ஆட்சி, சொல்லாததையும் செய்யக்கூடிய ஆட்சிதான் எங்களுடைய ஆட்சியாக இருக்கும்.

அதுமட்டுமல்ல. மற்றொன்று முக்கியமான செய்தியை நான் குறிப்பிட்டுச் சொன்னேன். இந்த ஆட்சி என்பது வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல. வாக்களிக்க மறந்தவர்களுக்கும், வாக்களிக்க தவறியவர்களுக்கும் சேர்த்து நடைபெறக்கூடிய ஆட்சி என்று சொன்னேன். அதையும் தாண்டி ஒன்று சொன்னேன். வாக்களித்தவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். வாக்களிக்க தவறியவர்கள் இப்படிப்பட்ட ஆட்சிக்கு நாம் வாக்களிக்காமல் போய்விட்டோம் என்று வருந்த வேண்டும் என்ற நிலையில் என்னுடைய ஆட்சி இருக்கும் என்று நான் சொன்னேன். அது இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும்.

**கழக ஆட்சியின் மீது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளது!**

தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்கள் 100க்கு 90 சதவீதத்திற்கு மேல் நிறை வேற்றிக்காட்டியிருக்கிறோம். இன்னும் மீதி இருக்கும் திட்டங்கள் என்னென்ன என்று நீங்கள் கேட்கலாம். இதில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், அறிவித்த திட்டங்கள் பல. தேர்தல் நேரத்தில் அறிவிக்காத திட்டங்களும் நிறைவேற்றப்பட்டி ருக்கிறது. அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

அது என்ன என்று கேட்டால், உதாரணத்திற்கு ஒன்றினை நான் சொல்கிறேன். புதுமைப் பெண் என்கின்ற திட்டம் தேர்தல் வாக்குறுதிகளில் வழங்கப்படவில்லை. புதுமைப் பெண் திட்டம் என்று சொன்னால் உங்களுக்குத் தெரியும். பள்ளி படிப்பை முடித்துவிட்டு ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்து இருக்கக் கூடிய மாணவிகள் வசதி இல்லாத காரணத்தினால் கல்லூரிக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. அதை உணர்ந்த காரணத்தினால்தான், நாம் ஒரு புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். பள்ளிப்படிப்பை முடித்த பிறகு கல்லூரிக்கு செல்கின்றபோது மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1000 வழங்கப்படும் என்று அறிவித்து இன்றைக்கு அது வழங்கப்பட்டிருக்கிறது. அதனால்தான், இன்றைக்கு இந்த மாணவிகளெல்லாம் என்னைப் பார்த்து அப்பா, அப்பா என்று அழைக்கக்கூடிய ஒரு உணர்ச்சிகரமான நெகிழ்ச்சியான செய்தியை நீங்களும் பார்த்திருப்பீர்கள். அந்த அளவிற்கு இந்த ஆட்சியின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. மாணவிகளுக்கு மட்டும்தானா, எங்களைப்போன்ற மாணவர்களுக்கு இல்லையா? என்று மாணவர்கள் கேட்டார்கள். உங்களுக்கும் உண்டு என்று சொல்லி தமிழ் புதல்வன் என்ற திட்டத்தை உருவாக்கி மாணவர்களுக்கும் மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், நம்முடைய வீட்டில் இருக்கக் கூடிய குழந்தைகள் பள்ளிக்கு செல்லும் போது காலை 8 மணிக்கு செல்லவேண்டும் என்று சொன்னால், அக்குழந்தைகளின் பெற்றோர்கள் கூலி வேலைக்கோ வேறு எந்த வேலைக்கோ செல்கின்ற சூழ்நிலையில், அவர்களால் சமைத்து, குழந்தைக்கு உணவைக் கொடுத்துவிட்டு பள்ளிக்கு அனுப்ப முடியாத நிலை உள்ளது. இதை உணர்ந்த இந்த ஆட்சி உடனடியாக அவர்களுக்காக ஒரு திட்டத்தை கொண்டுவந்தது,

> **"புதுமைப் பெண் என்கின்ற திட்டம் தேர்தல் வாக்குறுதிகளில் வழங்கப்படவில்லை. புதுமைப் பெண் திட்டம் என்று சொன்னால் உங்களுக்குத் தெரியும். பள்ளி படிப்பை முடித்துவிட்டு ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்து இருக்கக்கூடிய மாணவிகள் வசதி இல்லாத காரணத்தினால் கல்லூரிக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. அதை உணர்ந்த காரணத்தினால்தான், நாம் ஒரு புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். பள்ளிப்படிப்பை முடித்த பிறகு கல்லூரிக்கு செல்கின்றபோது மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1000 வழங்கப்படும் என்று அறிவித்து இன்றைக்கு அது வழங்கப்பட்டிருக்கிறது. அதனால்தான், இன்றைக்கு இந்த மாணவிகளெல்லாம் என்னைப் பார்த்து அப்பா, அப்பா என்று அழைக்கக்கூடிய ஒரு உணர்ச்சிகரமான நெகிழ்ச்சியான செய்தியை நீங்களும் பார்த்திருப்பீர்கள்."**

என்ன திட்டம் என்று சொன்னால், காலை உணவுத் திட்டம்.

**பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம்!**

மதிய உணவுத் திட்டம் என்ற பெயரில் நீதிக் கட்சி ஆட்சியிலிருந்தபோது தியாகராயர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம். அந்த திட்டத்தை தான் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஆட்சியின் காலத்தில் அதை பரவலாக்கி எல்லோருக்கும் சேருகின்ற வகையில் அதை நிறைவேற்றி காட்டினார். அதற்கு பிறகு எம்.ஜி.ஆர் அவர்கள் சத்துணவாக வழங்க வேண்டும் என்று சொல்லி சத்துணவு திட்டம் என்ற பெயரில் எம்.ஜி.ஆர் அவர்கள் அதை தொடர்ந்து நிறைவேற்றினார். அதற்கு பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு அது உண்மையான சத்துணவு என்று சொல்லி 5 நாட்கள் முட்டையுடன் கூடிய சத்துணவு திட்டத்தை நிறைவேற்றித் தந்தார்.

அதற்குப் பிறகு, தற்போது திராவிட மாடல் ஆட்சியில் அதையும் தாண்டி நம்முடைய வீட்டுக் குழந்தைகள் பள்ளிக்கு செல்கின்றபோது நாம் உணவை கொடுக்காமல் அனுப்பி வைக்கிறோமே என்ற ஏக்கத்தில் இருந்த பெற்றோர்கள் மகிழ்ச்சி யடையக்கூடிய வகையில் குழந்தைகள் பள்ளிக்கு வந்தவுடன் அவர்களுக்கு காலை உணவுத் திட்டம் என்ற பெயரிலே காலை உணவினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

## தி.மு.க.வுக்கு வாக்களிக்காதவர்களும் வருந்தும் வகையில் நல்லாட்சி நடத்துகிறோம்!

**மக்கள் எதிர்பார்ப்பதைவிட சிறந்தத் திட்டங்களைத் தருகிறோம்!**

இதையெல்லாம் நான் எடுத்துச் சொல்வதற்கு காரணம். இதுஎல்லாம் தேர்தல் வாக்குறுதிகளில் இல்லை. இல்லாத வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டியிருக்கும் ஆட்சி தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த ஆட்சியின் சார்பில்தான் இன்றைக்கு இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு வீடுகளை உருவாக்கித்தந்து அதற்கு தேவையான சலுகைகளை, நீங்கள் எந்த அளவிற்கு சலுகைகளை எதிர்பார்த்தீர்களோ, அதைவிட அதிகமான சலுகைகளை இந்த அரசு உங்களுக்கு வழங்கி இந்த திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

இதை நீங்கள் நல்லவகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு அப்படிப்பட்ட ஒரு சிறப்பான ஆட்சியை இன்றைக்கு உங்களுக்காக வழங்கிக்கொண்டிருக்கும் ஆட்சிக்கு நீங்கள் என்றைக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும், உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டு, உங்களுடைய மகிழ்ச்சி கலந்த மலர்ந்து இருக்கக்கூடிய உங்கள் முகங்களையெல்லாம் பார்க்கின்றபோது இந்த ஆட்சியின் மீது எப்படிப்பட்ட நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லி இந்த இனிய வாய்ப்பு தந்த அத்தனை பேருக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றி கண்டிருக்கும் நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கும், அதற்கு துணை நின்ற துறையின் அமைச்சராக இருக்கக்கூடிய அன்பரசன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, எல்லாவற்றிற்கும் துணையாக இருக்கக் கூடிய அரசு அதிகாரிகளுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு - மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

### செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 24-02-2025 திங்கட் கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலு வலகத்தில் எனது (இரா.கிரிராஜன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 19.02.2025

**இரா.கிரிராஜன் எம்.பி.**
செயலாளர் - தி.மு.க.
சட்டதிட்டதிருத்தக் குழு

---

### இளையான்குடி வட்டத்தில்

## கண்மாயில் மூழ்கி உயிரிழந்த 2 சிறுமிகளின் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, பிப். 21 -**

**சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், ஆழிமதுரை கிராமத்திலுள்ள கண்மாயில் மூழ்கி உயிரிழந்த சிறுமிகளின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதி உதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:-**

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், ஆழிமதுரை கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பில் பயின்று வந்த சிறுமி சோபியா (வயது 8) த/பெ. சசிகுமார் மற்றும் அங்கன்வாடி மையத்தில் படித்துவந்த சிறுமி கிருஷ்மிகா (வயது 4) த/பெ.கண்ணன் ஆகிய இருவரும் 19.02.2025 அன்று காலை பள்ளியின் எதிர்புறம் உள்ள கண்மாய்க்குச் சென்றபோது எதிர்பாராதவிதமாக கண்மாயில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில், உயிரிழந்த சிறுமிகளின் பெற்றோருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது பெற்றோருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; இந்தியப் பொருளாதாரம் வளர்ந்து வருகிறது - என பா.ஜ.க.வினர் வாய் நீளம் காட்டுகிறார்களே?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு படுவீழ்ச்சி; வர்த்தகப் பற்றாக்குறை வானளவு உயர்வு; இறக்குமதி அதிகரிப்பு; ஏற்றுமதி சரிவு; வேலை வாய்ப்புகள் எங்கே எனத் தேடும் நிலை; விலைவாசி தொடர்ந்து உயர்வு; நொறுங்கிப்போய்விட்ட நுகர்வோர் எதிர்பார்ப்பு!**

**இத்தகைய சூழலில் இந்தியப் பொருளாதாரம் வளருகிறது என்றால்; இந்தியர்கள் 'கேனையர்களாக இருந்தால் அல்லவா, கேப்பையில் நெய் வடிகிறது' என்பதை நம்புவார்கள்!**